# யூன்– 17 – பொதுக்கால11ம் வாரம் - ஞாயிறு

**“ஏனெனில் அறுவடைக்காலம் வந்துவிட்டது” மாற்.4:29**

## முதல் வாசகம் : ஏசேக்கியல் 17 : 22 - 24

தலைவராகிய ஆண்டவர் கூறுவது இதுவே உயர்ந்த கேதுரு மரத்தின் நுனிக்கிளை ஒன்றை எடுத்து நானே நடுவேன். இளங்கொழுந்து ஒன்றை அதன் நுனிக் கொப்புகளிலிருந்து கொய்து, ஓங்கி உயர்ந்ததொரு மலை மேல் நான் நடுவேன். இஸ்ரயேலின் மலையுச்சியில் நான் அதை நடுவேன். அது கிளைத்து, கனி தந்து, சிறந்த கேதுரு மரமாகத் திகழும். அனைத்து வகைப் பறவைகளும் அதனைத் தம் உறைவிடமாகக் கொள்ளும். அதன் கிளைகளின் நிழல்களில் அவை வந்து தங்கும்.ஆண்டவராகிய நான் ஓங்கிய மரத்தைத் தாழ்த்தி, தாழ்ந்த மரத்தை ஓங்கச் செய்துள்ளேன் என்றும், பசுமையான மரத்தை உலரச் செய்து, உலர்ந்த மரத்தைத் தழைக்கச் செய்துள்ளேன் என்றும், அப்போது வயல்வெளி மரங்களெல்லாம் அறிந்துகொள்ளும். ஆண்டவராகிய நானே உரைத்துள்ளேன் நான் செய்துகாட்டுவேன்.

**பதில்பாடல் :** உமது பெயரைப் பாடுவது உன்னதரே நன்று.

## இரண்டாம் வாசகம் : 2 கொரிந்தியர் 5 : 6 – 10

சகோதர சகோதரிகளே நாங்கள் எப்போதும் துணிவுடன் இருக்கிறோம். இவ்வுடலில் குடியிருக்கும் வரையில் நாம் ஆண்டவரிடமிருந்து அகன்று இருக்கிறோம் என்பது நமக்குத் தெரியும்.நாம் காண்பவற்றின் அடிப்படையில் அல்ல, நம்பிக்கையின் அடிப்படையிலேயே வாழ்கிறோம்.நாம் துணிவுடன் இருக்கிறோம். இவ்வுடலை விட்டகன்று ஆண்டவரோடு குடியிருக்கவே விரும்புகிறோம்.எனவே நாம் இவ்வுடலில் குடியிருந்தாலும் அதிலிருந்து குடிபெயர்ந்தாலும் அவருக்கு உகந்தவராயிருப்பதே நம் நோக்கம்.ஏனெனில் நாம் அனைவருமே கிறிஸ்துவின் நடுவர் இருக்கை முன்பாக நின்றாக வேண்டும். அப்போது உடலோடு வாழ்ந்தபோது நாம் செய்த நன்மை தீமைக்குக் கைம்மாறுபெற்றுக் கொள்ளுமாறு ஒவ்வொருவரின் செயல்களும் வெளிப்படும்.

## நற்செய்தி : மாற்கு 4 : 26 – 34

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தை நோக்கிக் கூறியதாவது: ”இறையாட்சியைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். நிலத்தில் ஒருவர் விதைக்கிறார். அவர் எதுவும் செய்யாமலே நாள்கள் நகர்ந்து செல்கின்றன. அவருக்குத் தெரியாமல் விதை முளைத்து வளருகிறது.முதலில் தளிர், பின்பு கதிர், அதன் பின் கதிர் நிறைய தானியம் என்று நிலம் தானாகவே விளைச்சல் அளிக்கிறது.பயிர் விளைந்ததும் அவர் அரிவாளோடு புறப்படுகிறார் ஏனெனில் அறுவடைக் காலம் வந்துவிட்டது” என்று கூறினார். மேலும் அவர், ”இறையாட்சியை எதற்கு ஒப்பிடலாம்? அல்லது எந்த உவமையால் அதை எடுத்துச் சொல்லலாம்?அது கடுகு விதைக்கு ஒப்பாகும். அது நிலத்தில் விதைக்கப் படும்பொழுது உலகிலுள்ள எல்லா விதைகளையும்விடச் சிறியது.அது விதைக்கப்பட்டபின் முளைத்தெழுந்து எல்லாச் செடிகளையும் விடப் பெரிதாகி, வானத்துப் பறவைகள் அதன் நிழலில் தங்கக் கூடிய அளவுக்குப் பெருங்கிளைகள்விடும்” என்று கூறினார். அவர்களது கேட்டறியும் திறமைக்கு ஏற்ப, அவர் இத்தகைய பல உவமைகளால் இறைவார்த்தையை அவர்களுக்கு எடுத்துரைத்து வந்தார்.உவமைகள் இன்றி அவர் அவர்களோடு பேசவில்லை. ஆனால் தனிமையாக இருந்தபோது தம் சீடருக்கு அனைத்தையும் விளக்கிச் சொன்னார்.

**தியானம்:** தூய பவுலடியார் கூறுவார், “நான் நட்டேன், அப்பொல்லோ நீர் பாய்ச்சினார், கடவுளே விளையச் செய்தார். நடுகிறவருக்கும் பெருமையில்லை, நீர் பாய்ச்சுபவருக்கும் பெருமை இல்லை, விளையச் செய்யும் கடவுளுக்கே பெருமை. நடுகிறவரானாலும், நீர் பாய்ச்சுகிறவரானாலும் ஒன்றுதான். தாம் செய்த வேலைக்கு ஏற்ப ஒவ்வொருவரும் தம் கூலியைப் பெறுவர். நாங்கள் கடவுளின் உடன் உழைப்பாளர்கள். நீங்கள் கடவுள் பண்படுத்தும் தோட்டம்.” (1.கொரி3:5-9) நாமெல்லாம் கடவுளால் பண்படுத்தப்பட்டு விளைவிக்க ஆயத்தப்படுத்தப்படும் தோட்டம். இந்த தோட்டத்திலிருந்துதான் கடவுள் விளைச்சலை ஏற்படுத்தி உலகத்தை வாழ்வித்துக் கொண்டிருக்கின்றார், மீட்பை தொடர்ந்தாற்றுகின்றார். இந்த நிலத்தில் விதைக்கப்பட்ட விதைதான் நம்முடைய வாழ்க்கையில் நாம் செய்ய வேண்டிய இறைத்திட்டம். இந்த விதை தன்னை மண்ணுக்குள் மறைத்துக் கொள்ளும் போதுதான் அதிலிருக்கும் ஜீவன் வெளியே வர ஆரம்பிக்கும். அதைப்போல நாம் நம்முடைய சுயங்களை மறைத்து, தான் என்ற அகங்காரங்களுக்கு இறந்து கடவுளுக்குள் நம்மை இணைத்துக் கொள்ளும் போது நமது வாழ்வு தேவனில் பலன் கொடுக்க ஆரம்பிக்கும். “கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலைக் கொடுக்கும்” (யோவா 12:24). விதை தன்னை மண்ணுக்குள் மறைத்துக் கொண்டாலே போதும் மண்ணுக்குள் இருக்கும் கதகதப்பு விதைக்குள்ளாக இருக்கும் ஜீவனை வெளியே கொண்டுவந்துவிடும். அதேபோல நாம் தேவபிரசன்னம் என்னும் கதகதப்பில், நெருப்பில் நம்மை இடையறாது வைத்துக் கொண்டே இருந்தோமென்றால் அதுவே நம்மிடம் இருக்கும் ஆற்றல்களை வெளியே கொண்டுவந்து இந்த உலகத்தின் மீட்புக்கான, வாழ்வுக்கான பணிகளை செய்து முடித்துவிடும். இதயம் என்னும் பலிபீடத்தில் ஏற்றப்பட்டிருக்கும் தேவ பிரசன்னம் என்னும் நெருப்பு அணைந்துவிடாமல் பார்த்துக் கொள் என்று லேவி.6:13 லே வாசிக்கின்றோம். இயேசுவுக்காக தாகத்தோடு ஏங்கும் வாஞ்சை நம் உள்ளத்தில் பற்றியெறியும் வரை நம்மிடமிருந்து வல்லமை புறப்பட்டுக் கொண்டே இருக்கும். நான் இந்த உடலில், உலகில் வாழ்ந்தாலும் இறந்தாலும் அவருக்காக வாழ்வேன், அவருடைய மகிமைக்காக வாழ்வேன் என்று வைராக்கியத்தோடு வாழும் நமது வாழ்வின் நிலத்திலிருந்து புதிய தளிர்களையும், புதிய நம்பிக்கைகளையும், புதிய கதிர்களையும், புதிய செயல்பாடுகளையும், புதிய விளைச்சலையும், விடுதலையின் அனுபவங்களையும் உருவாக்குவார். இயேசுவில், இயேசுவுக்காக, இயேசுவோடு வாழும் போதுதான் நமது வாழ்வு அர்த்தமுள்ளதாக அமையும். நாம் இவ்வுடலில் குடியிருந்தாலும் அதிலிருந்து குடிபெயர்ந்தாலும் அவருக்கு உகந்தவராயிருப்பதே நம் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதை மனதில் இருத்தி நாம் தேவ பிரசன்னத்தில் நிலைத்திருக்க உறுதியெடுப்போம் பயன்தரும் தோட்டங்காளாக உலகிலே வாழ்வோம்.